பதிவு எண் : M. 6311 ★ தொகுபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்பி

ஆண்டு : 16] சென்னை : கார்த்திகை 14 (29—11—68) வெள்ளி ★ வெளியூர் : கார்த்திகை 15 (30—11—68) சனி [இதழ் : 137

தேர்தலுக்குமுன் அமைச்சர்கள் பதவியைத் துறக்கவேண்டுமா?

இந்திய அரசின் நிலை என்ன?

புதுடில்லி, நவ. 29—

"தேர்தலுக்குமுன் அமைச்சர்கள் பதவியைத் துறக்க வேண்டுமென அரசு நினைக்க வில்லை"

என்று சட்டத் துறை துணையமைச்சர் முகம்மது யூனஸ் சலீம், மக்களவையில், முரசொலி மாறன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சனநாயகத்தில் ஒரு கரும் புள்ளி

செயல் முறைகளையே உறிஞ்சிவிடும்

'இதுபோன்ற கொடுமைமிக்கதோர் சட்டத்தை பிரிட்டிஷ் ஆட்சியும் உருவாக்கவில்லை'

மக்களவையில் இரா. செழியன் கண்டனம்

புதுடில்லி, நவ. 28—

"இந்த மசோதா, சனநாயகத்தின் செயல்முறையையே உறிஞ்சிவிடும் ஒன்றாகும்; சனநாயகத்தில் ஒரு கரும் புள்ளியாகும்; சனநாயகத்திற்கே விரோதமானதாகும்.

"மிக மோசமான காலம் என்று கருதப்படும் 1942-ல் பிரிட்டிஷ் ஆட்சிகூட இப்படிப்பட்ட கொடுமையான தண்டனை விதிக்கும் சட்டத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை"

என்று மக்களவையில் கழக உறுப்பினர் இரா. செழியன் அவர்கள்' இரயிலவே (சட்டத் திருத்த) மசோதாமீது பேசுகையில் சுட்டிக் காட்டிக் கண்டித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சோஷலிச சமுதாயத்தை அமைக்கப்போவதாகக் கூறும் காங்கிரசு அரசு, தொழிலாளர் கனைப் பாதிக்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது.

"மழியல் செய்வதற்குத் தடை லித்திக்கின்றனர் — அதுவும், காந்தி நூற்றாண்டு விழா, இந்த ஆண்டில்!

"எந்தப் பிரச்சினைக்கும் மத்திய அரசு, உடனடியாகத் தீர்வு காண்பதில்லை; பிரச்சினையை ஆறப்போட்டு அது முற்றியதும், 'ஸ்டை' போட்டு அடக்கு கிறது!

"ஆயுள் இன்ஷ்யூரன்சு ஊழியர்கள், லிவரலீவ் வேலோரித்தம் செய்யப் போகின்றனர்; அவர்களுடைய சட்டத்தின் மூலம் அடக்குவதற்கு அரசு முயற்சிக்கக் கூடாது; சமுகமான பேச்சுவார்த்தை முலம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்."

தகராறுக்குரியதானதாலும் நிறைவேறிவிட்டது!

மிகுந்த தகராறுக்குரியதும்—ஆனால் ஆளும் கட்சியினரின் பெரும்பான்மை ஆதரவு பெற்றதுமான இரயில் போக்குவரத்துக்குத் தடங்கல் உண்டாக்கும் நபர்களைத் தண்டிக்க வகை செய்யும் மசோதாவை, மக்களவையில் நிறை வேறிவிட்டது.

செப். 19-ல் நடைபெற்ற மத்திய அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத் தின்போது பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தில் உள்ளடங்கியிருந்ததை நாடாளுமன்றம் நிறைவேற்றிச் சட்டமாக்குவதே இம் மசோதாவின் நோக்கம்.

கடும் எதிர்ப்பு

மசோதா மீது பேசுகையில், எல்லா எதிர்க் கட்சி உறுப்பினர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஜனசங்க உறுப்பினர் ஒருவர், மசோதாவை, 'தொழிலாளர் விரோத -- மக்கள் விரோத -- கறுப்பு மசோதா' என வர்ணித்தார்.

கம்யூனிஸ்டு உறுப்பினர் எஸ். எம். பானர்ஜி, 'நாடாளுமன்ற சனநாயகத்தின் சட்டபூர்வமல்லாத குழந்தை' என்றும், 'சர்வாதிகாரத்தின் துவக்கம் இந்த மசோதா' என்றும் கூறினார்.

"அரசின், தொழிலாளர் விரோதக் கொள்கைக்கு முடிவுகட்டும் வரையில் போராட்டம் ஓயப் போவதில்லை" என்றும் அவர் கூறினர்.

ஜார்ஜ் பெர்ணண்டஸ் (சு. சோ.) பேசுகையில், 'அண்மைத்துலகத் தொழிலாளர் நடைமுறையை இம்மசோதா காற்றில் பறக்க விடுகிறது' என்று கூறி, நாடாளு மன்றத்திற்கு வெளியில் இதற்குப் பதில் கிடைக்கத்தான் போகிறது' என அரசை எச்சரித்தார்.

வெளிநடப்பு

மசோதா நிறைவேறுமுன் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனை வரும் வெளிநடப்புச் செய்தனர்.

மசோதாவை குரல் வோட்டுக்கு விட்டதும், 'அவையில் கோர மில்லை' என்று உறுப்பினர்கள் கூறியதை தண்ட அவைத் தலை வர் நிராகரித்துவிட்டார்.

நீண்ட நேர விவாதம்

இந்த மசோதாமீது 3-மணி நேரம் விவாதம் நடைபெறுவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது; ஆனால், 12 மணி நேரம் இதன் மீது விவாதம் நடைபெற்றிருக் கிறது.

கடைசி நேர முயற்சி

விவாதத்தின் கடைசி நேரத்தில் கூட, இதை நிறைவேறுமல் ஒத்திவைக்க ஒரு முயற்சி மேற் கொள்ள படப்பட்டது -- ஆனால வெற்றி பெறவில்லை.

ச. சோ. உறுப்பினர் ஜார்ஜ் பெர்ணண்டஸ், 'விவாதத்தை முன்று மாதத்துக்குத் தள்ளி வைக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டது நிராகரிக் கப்பட்டது.

விவாதத்துக்குப் பதிலளித்த இரயில்வே அமைச்சர் பூஞ்சர --மசோதாவை ஆதரித்துப் பேசுகையில் -- 'ஊழியர்களின் உரிமைகள் இதனுல் பாதிக்கப்படவில்லை' என்று கூறினர்.

மசோதாவை ஒட்டுக்கு விடுவ தற்குமுன், கம்யூனிஸ்டு உறுப் பினர் எஸ். எம். பானர்ஜி, 'மக்களவையின் சரித்திரத்தில் இது ஓர் துக்க நாளாகும்' என்று கூறி வெளிநடப்புச் செய்தார்.

ஜார்ஜ் பெர்ணண்டஸ், 'போலீசு ஆட்சி ஒழிக; அடக்குமுறை ஆட்சி ஒழிக' என்று கூறிக் கொண்டே வெளிநடப்புச் செய் தார்.

ரூ. 1,500 கோடி அளவில் புதிய வரி விதிப்பு?

திட்டமிட்ட அளவை எய்த மாநிலங்கள் திரட்ட வேண்டுமாம்

புதுடில்லி, நவ. 29—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனியார் துறையில் ரூ. 7,500 கோடி முதலீடு செய்வது என்று ஏற்கனவே தீர்மானிக் கப்பட்டிருந்ததற்கு மாறாக, அதை ரூ 10,200 கோடிக்கு உயர்த்து வது என்று திட்டக் குழு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

திட்டக் குழு, தொழிலதிபர் களுடனும், பொருளாதார நிபுணர் களுடனும் சில மாதங்களாக நடத்திவந்த பேச்சுவார்த்தையின் வினவே இந்த முடிவு என்று கூறப் படுகிறது.

இங்கு நடைபெறும் தேசிய வளர்ச்சிக் குழு, நான்காம் திட்ட அளவின் விவரத்திக்க இருக்கிறது; 'நான்காம் திட்டம் ரூ. 25,000 கோடி அளவுக்கு இருக்கவேண் டும்' என்ற அடிப்படையில் விவா தம் நடைபெறும்.

இதில், பொதுத் (அரசு) துறை யில் ரூ. 14,800 கோடி என்றும், தனியார் துறையில் 10,200 கோடி என்றும் ஒதுக்கப்பட்டி ருக்கிறது.

பொதுத் துறையில் ரூ. 14,800 கோடி என்று நிர்ணயிக்கப்பட் டிருப்பதில் மாநிலங்களின் பங்கு ரூ. 6,500 கோடியாகும்; இதில் மத்திய உதவி ரூ. 3,500 கோடி யாக இருக்கக்கூடும். மீதி, மாநிலங்கள் இப்போழுது நிர்ண யித்திருக்கும் அளவான ரூ. 1,500 கோடியுடன் மேலும் வரி விதிப்பு — இதர முறைகள் முலம் மாநிலங்கள் ரூ. 1,500 கோடி திரட்ட வேண்டுமென்பது கொள்கையாம்.

மத்திய அரசு கூடுதலாக ரூ. 2,500 கோடி திரட்டவேண்டும் என்பது யோசனையாகும்; ஆனல், அமைச்சரவைக் கூட் டத்தில் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், புது வரி விதிப்பு மூலம் ரூ. 1,000 கோடி மட்டுமே திரட்ட முடியும் என்று கருத்தறிவித்தாராம்.

மாநில அரசுகளும் புது வரி விதிப் புக்குத் தயக்கம் காட்டுகின்றன வாம்.

தாயகம் திரும்புவோர்க்கு இலங்கையின் புதிய சலுகை

ரூ. 75,000 மதிப்புள்ள சேமிப்புகளை எடுத்துச்செல்ல அனுமதி

இலங்கைத் தலைமை அமைச்சர் டட்லி சேனநாயகா அறிவிப்பு

புதுடில்லி, நவ. 29—

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்தியக் குடியைச் சேர்ந்தவர்கள் அதிகபட்சம் ரூ. 75,000 (இலங்கை ரூபாய் மதிப்புப்படி)-வரை தங்களுடைய சேமிப்புகளை எடுத்துச் செல்ல அனுமதிப்பது என்று இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக இலங்கைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா அறிவித்தார்.

இந்தியத் தலைமையமைச்சர் இந்திராவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இதை அவர் அறிவித்தார்.

தொல்லைகள் நீங்கும்

இப்போதைய அந்நியச் செலாவணி விதிகளின் கீழ் தங்களுடைய சேமிப்பை இந்தியாவுக்கு அனுப்ப அல்லது கொண்டு செல்வதற்காக இந்தியச் செலாவணித் தகுதிச் 'சர்டிபிகேட்'டுகளைப் பெற இந்தியர்கள் தாங்கள் அனுப்பும் தொகையில் 40 சதவிகிதம் செலுத்த வேண்டியிருக்கிறது; இந்தியாவிலுக்கு உள்ள இந்தச் சிரமமதை இன்றைய அறிவிப்பு அகற்றும் என்று கருதப் படுகிறது.

அர்த்தமென்ன?

சென்ற ஆண்டு இலங்கை ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்ட தால் ஏற்பட்ட சிரமமதை இந்த புதிய சலுகை அகற்றி விடும்.

இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்கள் ஒரு இலட்சம் இந்திய ரூபாய் பெறுமானை சேமிப்புகளை எடுத்துச் செல்ல முடியும் என்பதே இதற்கு அர்த்த மாகும் என்று விளக்கப்பட் டது.

3,50,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை

"1964-ம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி இந்தியக் குடியுரிமையைச் சேர்ந்த 5,50,000 பேர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படுவர். 3,50,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படும்; குடியுரிமை வழங்கும் வேலை துரிதப்படுத்தப்படும்" என்று இலங்கைத் தூதுக் குழு உறுதியளித்தது.

'ஐந்து மாவட்டங்களில்'

ஏழு நாட்கள்'---

என்ற தொடரில் வெளிவரும் கடைசி இரு கட்டுரைகள், 'நம் நாடு' சனி, திங்கள் இதழ்களில் இடம் பெறும்.

நான்:

'அண்ணு கண்ட அமைதிப் படை'

சீரணி பற்றிச் சில கருத்துக்கள்

40புதிய கல்லூரிகள்

நான்காம் திட்டத்தில் துவக்கப்படும்

சென்னை, நவ. 29—

நான்காவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் புதிதாக அரசுச் சார்பிலும், தனியார் சார்பிலும் மொத்தம் 40 கல்லூரிகள் ஏற்படுத்தப்படும்; இப்போது 126 கல்லூரிகள் உள்ளன; இது 166 ஆக அதிகரிக்கும்.

மாநிலத் திட்ட நகலில், துவக்க -- உயர்நிலைக் கல்விக்காக ரூ. 53.17 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்காக ரூ. 6.59 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

துவக்க -- உயர்நிலைக் கல்வி விரிவாக்கப்படுவதன் விளைவாக, 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 100 சதவிகிதம் பேர் பள்ளிகளில் சேருவார்கள்; 11 முதல் 14 வயது வரையுள்ளவர்களில் 80 சதவிகிதம் பேர் பள்ளிகளில் சேருவார்கள்; 14 முதல் 17 வயது வரை உள்ளவர்களில் 35 சதவிகிதம் பேர் படிக்க வசதி இருக்கும்.

தொழில் நுட்பக் கல்வித்துறை விரிவாக்கப்படமாட்டாது. தொழிற்சாலைகளில் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட திட்டங்களைக் கருத்திலிறுத்திப் பல தரப்பட்ட துறைகளில் கல்விக்கு வகை செய்யப்படும்.

நகராட்சித் தேர்தல்கள்

அமைச்சர் முத்துசாமி தரும் விளக்கம்

திருச்சி, நவ. 28—

"தமிழ் நாட்டிலுள்ள 84 நகராட்சிகளுக்கு பிப்ரவரி இறுதியில் தேர்தல் நடைபெறும்; இரண்டு இரண்டு நாட்கள் இடைவெளிவிட்டு, மூன்று நாட்கள் இந்தத் தேர்தல் நடைபெறும்; வாக்குச்சாவடி சிப்பந்திகளும், போலீசாரும் போவதற்கு வசதியாக இவ்வாறு மூன்று வெவ்வேறு நாட்களில் தேர்தல்கள் நடத்தப்படும்"

இவ்வாறு உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"தேர்தல் நாட்கள் டிசம்பர் மாத இறுதியில் முடிவு செய்யப்படும்" என்றும் அவர் கூறினார்.

இந்திய விமானங்கட்கு புதிய சாதனம்!

கடும் பனி அல்லது மழை காரணமாக ஒரு சில நேரங்களில் குறிப்பிட்ட விமான நிலையத்தில் இறங்கவேண்டிய விமானம், அங்கு இறங்காமலேயே போய் விடுவதுண்டு; காரணம், பனி அல்லது மழை காரணமாக ஓட்டப் பாதை, விமான நிலையக் கட்டிடங்கள், மற்றும் அங்கு உள்ள எதுவும் விமான ஓட்டிக்குத் தெரிவதில்லை.

இதற்குப் பரிகாரம் காணும் வகையில் விமான ஓட்டிக்கு உதவும் கருவிகளை இந்தியாவுக்கு அனுப்புகிறது பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று. இந்தியாவில் உள்ள சில முக்கியமான விமான நிலையங்களில் பயன்படுத்துவதற்காக இவை வாங்கப்படுகின்றன.

பனி, மழை காரணமாக விமான ஓட்டிக்குத் தரையைப் பார்க்க இயலாவிடினும், விமானம் 'தானே' கீழே பத்திரமாக இறங்க இந்தக் கருவிகள் உதவும்.

இறங்கவேண்டிய விமான நிலையத்தின் ஓட்டப் பாதையின் ஒரு மூலையில் பொருத்தப்படும் இக் கருவிகள், நிலையத்திற்கு 10 அல்லது 15 மைல்களுக்கு அப்பால் விமானம் வரும்போதிலிருந்தே அதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவருகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு

தமிழக அரசுதிட்டத்திற்கு மத்திய அரசு உதவுமா?

அமைச்சர் சாதிக்பாட்சா தரும் விளக்கம்

சென்னை, நவ. 28—

"உலகம் முழுவதிலும் அண்மைக்காலத்தில் ஒரு கோடி மக்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கின்றனர்; இவர்களில் 50 இலட்சம்பேர் இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த மக்களாவர்; இந்த 50 இலட்சம் மக்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 7,30,000 பேர்களாகும்.

"நான்காவது திட்ட காலத்தில் தமிழக அரசு ரூ. 25-கோடி முதல் ரூ. 30-கோடிவரை செலவுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது; செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்குமென நம்புகிறோம்"

என்று, நலத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"குடும்ப நலத் திட்டத்தைக் கிராம மக்களிடையே பரப்புவதற்கும், இத்திட்டத்தைப் பத்திரிகைகள்மூலம் அனைவரும் ஏற்கத்தக்கவாறு ஊக்குவிக்கவும் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தும்.

படித்தறிந்த மக்களிடையே இத்திட்டத்திற்கு நல்லாதரவு இருக்கிறது. பாமரமக்களும் இதன் அவசியத்தை உணர்ந்து தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்திக்கொண்டு நலம்பெற பத்திரிகைகள் உறுதுணையாக இருந்து ஊக்குவிக்கவேண்டும்.

தற்போது பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 41 என்றிருக்கிறது, இதை இன்றும் ஆறு ஏழு ஆண்டுகளில் 23 ஆகக் குறைத்திடவேண்டும்.

குடும்பக் கட்டுபாடு மாத்திரைகளைப் பொறுத்தவரையில் அது பரிசோதனை அளவில்தான் இருக்கிறது; அதனால் பயன்படுத்துவோருக்கு பாதகம் ஏதும் ஏற்படாது என்றறிந்ததும் அவைகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்.

குடிசைவாசிகளிடையே இத்திட்டம் பரவிட வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குறைகளிருப்பதாக தெரிவித்தால் அதனை தவிர்க்க அரசு தயாராக இருக்கிறது.

வரி பாக்கிகள் பல வசூலிக்க இயலாதவையாம்!

இயன்றதை வசூலிப்பதற்கே முயற்சிக்கப்படுகிறதாம்

புதுடில்லி, நவ. 28—

"1968 மார்ச் 31-ந்தேதி முடிய வருமான வரி மொத்த பாக்கி மீ. 622.61 கோடி; இதில் வசூலாகக்கூடிய நிலவரி பாக்கி ரூ. 341.66 கோடி"

என்ற தகவலை துணை நிதியமைச்சர் கே. சி. பந்த், மாநிலங்களவையில் தெரிவித்தார்.

"பெரும் அளவில் வருமான வரி பாக்கி வைத்துக் கொண்டிருக்கும் பிஜு பட்நாயக்குக்கு பஞ்சாபில் ரூ. 60 கோடி செலவில் ஒரு உரத் தொழிற்சாலை அமைக்க அரசு எப்படி அனுமதித்தது?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

"பட்நாயக்கின் வரி பாக்கிகளில் பெரும்பாலானவை அப்பீலில் இருக்கின்றன" என்று அமைச்சர் கூறினார்.

மொத்த வருமான வரி என்பதில் எத்தனையோ இனங்கள் சேர்ந்துள்ளனவென்றும், அவை வசூலிக்க முடியாதவை என்றும், வசூலிக்கக் கூடிய நிகர வரி பாக்கிகளை வசூலிக்கவே அரசு இப்பொழுது முயற்சிக்கிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

உயர் பதவிகளுக்கான தேர்வு முறை

தகுதிச் சோதனைகள் கடுமையாகும்

நாடாளுமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, நவ. 29—

"மத்திய அரசின் உயர்தரப் பதவிகட்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தகுதியைப் பொறுத்த சோதனை கடுமையாக நடத்தப்படும்"

என்று நாடாளுமன்ற மேலவையில் உள்துறைத் துணையமைச்சர் சுக்லா கூறினார்.

நேரடித் தேர்வு முறைப் பதவிகளுக்கு, பதவி உயர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்படும்போது, சில குறிப்பிட்ட துறைகளில் அவர்களின் திறமை கவனிக்கப்படுகிறது என்றும், ஆண்டுதோறும் ஏற்பட்டுவரும் காலி இடங்களுக்கேற்ப இவர்களின் எண்ணிக்கையை 5—6 மடங்குக்கு உயர்த்த வேண்டுமென்றும் அவர் கூறினார்.

தனித் திறமைவாய்ந்த ஓர் அதிகாரியாக இருந்தால் அவரது பெயரையும் இப்பட்டியலில் உட்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

நேர்முகத் தேர்வு இல்லாத ஏனைய பதவிகட்கு, தகுதிகளுக்கேற்ப சீனியாரிட்டி அடிப்படையில் பதவி உயர்வு தரப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்திய நிர்வாக அதிகாரிகளின் எண்ணிக்கை 3,053 ஆகும் என்றும், இப்பொழுது 2,637 அதிகாரிகள் பணிபுரிந்துவருவதாகவும் அமைச்சர் மற்றொரு கேள்விக்குப் பதிலளித்தார்.

1967-ம் ஆண்டு முடிவில் மத்திய அரசில் தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரிந்தோர் தொகை 7,80,000 ஆக இருந்திருக்கிறது என்றும் அவர் இன்னொரு உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார்.

தலைமறைவு நாகர்கள் 'தளபதி' கைது

கோகிமா, நவ. 29—

தலைமறைவு நாகர்களின் தளபதி தெஸ்ஸாய் என்பவர், பர்மியப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவர் புரட்சி நாகர்களின் ஒரு குழுவுடன் சீனாவுக்குச் சென்று கொண்டிருந்தாராம்.

இவருடன், 'நாக அரசின் முன்னாள் தலைமையமைச்சர்' ஒருவரின் செயலாளரான அங்காம் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவர் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்காக டெல்லி கொண்டுவரப்பட்டிருக்கிறார்.

தெஸ்ஸாய் இன்னமும் பர்மாவில் காவலில் இருந்துவருகிறார்.

இந்திய பத்திரிகைகள்

பாகிஸ்தானில் பெரிதும் விரும்பப்படுகின்றன

காத்மண்டு, நவ. 29—

இந்திய நாளிதழ்களும் பத்திரிகைகளும் பாகிஸ்தானில் பெரும் அளவுக்கு விரும்பப்படுகிறதாம்.

இந்தியப் பத்திரிகைகள் எல்லை வழியாகக் கடத்தப்படுவதாகவும், உடனே பாதுகாப்பாகப் படிக்கும் பொருட்டு அவைகள் பதுக்கப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தான் மக்கள் செய்திகளை உண்மையாகவும், தணிக்கையின்றியும் படிக்க விரும்புவதனாலேயே இந்தியப் பத்திரிகைகள் விரும்பப்படுவதற்குக் காரணமாம்.

கிழக்குப் பாகிஸ்தானிலும் மேற்கு பாகிஸ்தானிலும் இம்மாதிரி நடைபெறுவதாகவும், பெருவாரியான மக்கள் இந்தியாவுடன் நல்ல நட்புறவுடன் வாழ விருப்பம் உள்ளவர்களாவர் என்றும் கூறப்படுகிறது.

'வாய்ப்பளிக்கவில்லை என்பது சரியல்ல'

'வசதிக்குறைவு காரணமாகவே அமெரிக்காவுக்குச் சென்றார்'

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி பற்றி நாடாளுமன்ற மேலவையில் விளக்கம்

புதுடில்லி, நவ. 29—

"அண்மையில் நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி டாக்டர் கொரானா, இந்தியாவில் இருந்தபோது -- உயர்ந்த தகுதிகள் இருந்தும் அவர் ஒரு வேலை வாய்ப்பைப் பெறமுடியாமற்போய்விட்டது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்"

என்று நாடாளுமன்ற மேலவையில் கூறப்பட்ட யோசனையை, கல்வி அமைச்சர் திரிகுண சென் நிராகரித்தார்.

"இப்படி ஒரு விசாரணை நடந்தாலும் எந்தவிதப் பயனும் ஏற்பட்டுவிடாது" என்று அமைச்சர் கருத்தறிவித்தார்.

"விஞ்ஞான--தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் உசேன் சகீர், 'டாக்டர் கொரானாவுக்குத் தகுந்த வேலை தரப்படவில்லை' என்று கூறியிருப்பதை அமைச்சர் கவனித்தாரா?"

என்று ஆதிநாராயண ரெட்டி என்னும் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, திரிகுண சென் பதிலளிக்கையில், 'டாக்டர் கொரானா வெளிநாடு சென்றதற்குப் பண வருவாய் காரணமல்ல; இந்தியாவில் ஆராய்ச்சி நிறுவனங்களில் போதிய வசதியின்மையே காரணம்' என்று கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாதாவது:—

"1962-ல் சண்டிகார் நிறுவனமொன்றின் 'பயோ -- கெமிஸ்ட்ரி' துறையில் ரூ. 2,000—2,500 சம்பள விகிதத்தில் டாக்டர் கொரானாவுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது; ஆனால் 'அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது இங்குள்ள ஆராய்ச்சி வசதிகள் திருப்திகரமாக இல்லை' என்று கூறி டாக்டர் கொரானா அதை ஏற்க மறுத்தார்.

"மீண்டும் 1964-ல், அமைக்கப்படவிருந்த தேசிய 'பயோலாஜிகல்' ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இத்துடன், ஆண்டுக்கு ஒரு முறையோ, ஈராண்டுக்கு ஒரு முறையோ இந்தியாவுக்கு வருகை தருமாறும் அவருக்கு அழைப்புத் தரப்பட்டது; ஆனால் அவர், இந்தியாவுக்கு வருகைதர வேண்டுமென்ற அழைப்பை மட்டும் ஏற்றுக் கொண்டார்; தமது ஆராய்ச்சியின் பயன் கெட்டுவிடும் என்று கூறி இந்திய நிறுவனத் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார்."

இதுகுறித்து டாக்டர் கொரானா அப்பொழுது எழுதியிருந்த கடிதத்தின் பகுதி ஒன்றையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதில் டாக்டர் கொரானா, விஞ்ஞான உலகில் தமது குறிக்கோள் ஆராய்ச்சியே என்றும், முக்கியமான நிர்வாகப் பொறுப்பில் இருந்துகொண்டு தம்மால் எந்தத் தனித் திறமையையும் காட்ட முடியாது என்று கருதுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நேரத்தில் அர்ச்சுன் அரோரா என்னும் உறுப்பினர், அமெரிக்கக் குடியுரிமையை ஏற்றுக் கொண்டிருக்கும் டாக்டர் கொரானா குறித்து அரசு இவ்வளவு கவலை எடுத்துக்கொள்வது குறித்து மிகுந்த வியப்புத் தெரிவித்தார்.

அமைச்சர் திரிகுண சென், அரோராவின் இக்கேள்வி பற்றி மிகுந்த வருத்தம் தெரிவித்துவிட்டுக் கூறியதாவது:—

"தமக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புக்களைப் பயன்படுத்த டாக்டர் கொரானா விரும்பாமல் போனது குறித்து யாரும் அதிருப்தியடைய வேண்டியதில்லை. அமெரிக்கக் குடியுரிமையை அவர் ஒற்றுக் கொண்டார் என்பதாலேயே அந்த மகிழ்ச்சியை நாம் குறைத்துக் கொள்ளவும் வேண்டியதுமில்லை; டாக்டர் கொரானா இன்னமும் இந்தியாவின் பெருமைக்குரிய குடிமகனாகவே தொடர்ந்து கருதப்படுவார்."

அமைச்சர் இப்படிக் கூறியதும் அவையின் எல்லாத் தரப்பினரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அமைச்சர் சென் மேலும், 'வெளிநாடுகளில் பணியாற்றும் எல்லா இந்திய விஞ்ஞானிகளும் நாட்டுப்பற்றுடையவர்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை; ஆனால் நாட்டுப்பற்று ஒன்றை வைத்துக்கொண்டு மட்டுமே அவர்கள் எல்லோரும் வாழமுடியும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது; இவர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளும் இங்கு கிடைக்கவேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

உறுப்பினர் அரோரா இடைமறித்து, அமைச்சர் ஆபத்தான வழி காட்டுவதாகக் குறை கூறினார்.

அமைச்சர் திரிகுணசென் இதில் ஆபத்து ஏதும் இல்லை என்றும், இந்தியாவின் பொருளாதார நிலைமை சீர்பட்டு இளைஞர்களுக்கு ஆராய்ச்சிக்கான வசதிகள் பெருகுவதன்மூலம் மட்டும்தான் இதற்குப் பரிகாரம் காணமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

பர்மா அகதிகளுக்காக நில மீட்சித் திட்டம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி துவக்கிவைத்தார்

மதுராந்தகம், நவ. 28—

சூணாம்பேடு -- வில்லிவாக்கம் கிராமத்தில் நில மீட்சித் திட்டத்தை வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி துவக்கிவைத்தார்.

150 பர்மிய குடும்பங்களின் மறுவாழ்வு -- சமூக நல நடவடிக்கைக்கான கிறித்துவ ஏஜென்சியால் ('காசா') இத்திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது.

'உழைப்புக்காக உணவு அளிக்கும் திட்ட'த்தின்கீழ் அந்த நிறுவனம் 1,500 மூட்டை கோதுமையும், 100 டின் எண்ணெயும் அளித்துள்ளது; இந்தக் கோதுமையும் எண்ணெயும் திட்ட வேலையில் ஈடுபடும் தொழிலாளருக்கு ஊதியமாக அளிக்கப்படும்.

"இந்தத் திட்டத்தினால் தென்னிந்தியாவில் 5-இலட்சத்துக்கும் அதிகமானபேர் நன்மை பெறுகின்றனர்; சாதி -- மத வேறுபாடின்றி இந்த நிறுவனம் பணியாற்றுகிறது" என்று அந்நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

பர்மா அகதிகளுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு உதவி செய்யும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார் அமைச்சர்.

விழாவிற்கு, கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

மாவட்ட ரெவினியூ அதிகாரி கே. சண்முகம், 'பர்மா அகதிகளுக்கும், அங்குள்ள மக்களுக்கும் விவசாயத்துக்காக இரண்டு ஏக்கர் நிலமும், வீடு கட்டிக்கொள்ள இரண்டு சென்ட் வீதம் நிலமும் தரப்படும்' எனத் தெரிவித்தார்.

திரு. எல்லப்ப பாகவதர் எம்.எல்.ஏ. அவர்களும் பேசினார்,

'கல்லூரி மாணவர்கட்குத் தனி வண்டி விடுக'

திருப்பதி -- இராமேசுவரம் விரைவு வண்டி தேவை

இரயில்வே ஆலோசனைக் குழுவில் எஸ். டி. சோமசுந்தரம் கோரிக்கை

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், இரயில்வே ஆலோசனைக் குழுவில் பேசியதாவது:—

"அதிராம்பட்டினம் கல்லூரி இருக்கும் இடம் ஏழை மக்கள் வசிக்கும் பகுதியாகும். சுமார் ஐம்பது மலைத் தூரமுள்ள சுற்றுவட்டாரத்திலிருந்து மாணவர்கள் நாள்தோறும் கல்லூரிக்கு வந்து வீடு திரும்புகிறார்கள். ஏழை மாணவர்கள் -- நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் உணவு விடுதியில் தங்கிப் படிக்க முடியாத நிலையில் உள்ளார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும் -- விலையேற்றத்தின் காரணமாக உணவு விடுதியின் கட்டணம் மாதம் நாறு ரூபாயை 'எட்டிப் பிடித்துக்கொண்டு உள்ளது என்பது! ஏழை மாணவர்கள் இப்படிச் செலவு செய்ய முடியுமா ?

காலையில் நான்கு மணிக்கு எழுந்து இரவு பத்து மணி ஆனவுக்கு வீட்டிற்குச் செல்லும் வகையில் இரயில் அதிராமபட்டினம் வருகிறது. மாணவர்கள் படிக்க நேரமின்றி அல்லலுடுகின்றனர். ஆகையால் தற்சமயம் ஓடுகின்ற இரயில்கள் காலையில் குறைந்தது ஒரு மணி தாமத மாகவும் இரவில் வரும் இரயில் ஒரு மணி முன்னதாகவும் வர ஏற்பாடு செய்யவேண்டும். சிறிய சிரமம் எடுத்துக்கொண்டு இரயில்வே அதிகாரிகள் முயன்றால் முடியும்.

இது முடியாவிட்டால், காரைக்குடி -- திருத்துறைப்பூண்டிக்கு தனிக் கல்லூரி மாணவர்களுக்காகத் தனிக் காசில் போடவேண்டுமானால் ஒரு நாளைக்கு ரூபாய் அதிகம் செலவாகிறது' என்று தெரிவித்துள்ளார். அமைச்சர் கொடுத்த இந்தக் கணக்கு தவறுதலாக இருக்கலாம் என்று கருதுகிறேன்; இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம் -- காரைக்குடி இரயில் பாதை, இரயில் கேமாசு செல்லுவதற்கு ஏற்றவாறு செப்பனிடப்பட்டு வருகிறது; இது இன்னும் எவ்வளவு தூரம் பாக்கி இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

இராமேசுவரம் தனித் இரயிலைத் திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி மார்க்கமாக விடுவது பற்றி ஆலோசனைக்கு கேட்டுக் கொள்கிறேன்.

இப்பகுதியில் மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. திருப்பதி, இராமேசுவரம் செல்லுகிறவர்கள் அவதிப்படுகிறார்கள்; எனவே, திருப்பதி -- இராமேசுவரம் எக்ஸ்பிரசை, பட்டுக்கோட்டை -- அறந்தாங்கி மார்க்கமாக விடுவது பற்றி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இது இரயில்வேத் துறைக்கு நலவருமானத்தைக் கொடுக்கும்.

இராமேசுவரம் தனித் வண்டியில் பட்டுக்கோட்டை -- அறந்தாங்கி போவதற்குத் ஒரு 'போகி' இணைக்கிறார்கள்; அந்தப் 'போகி'யில் முதல் வகுப்பும் இருக்கிறது; மூன்றாவது வகுப்பில் செல்லுகின்ற ஏழைப் பயணிகள் நிற்பதற்குக்கூட இடமில்லாது அவதிப்படுகிறார்கள்; எனவே, மூன்றாவது வகுப்பில் செல்லும் பயணிகளுக்கு மட்டும் ஒரு தனி 'போகி' சேர்க்க வேண்டும்.

பேரளம் -- காரைக்காலுக்கு இரயில் ஒருமுறை போய் ஒரு முறை திரும்பிவருகிறது; ஆனால் இரயில் எத்தனை முறை போய் வந்தாலும் சிப்பந்திகள் செலவு -- அதாவது ஸ்டேஷன் மாஸ்டர், உதவியாளர்கள், பாயிண்ட்ஸ்மென், லெவல் கிராசில் இருப்பவர்கள் ஆகியோரின் செலவு—ஒன்றுதான்; ஏன், ஒருநாளைக்குக் குறைந்தது மூன்று முறையாவது போய்வர ஏற்பாடு செய்யக் கூடாது ?

தற்போது போகிற நேரமும் பயணிகளுக்கு ஏற்றவாறு இல்லாமல் அதிகாலையிலும் இரவிலும் செல்லுகிறது; சிறிது தூரம் பயணம் செய்வார்கள்; வெகுதூரம் செல்லுவார்கள் இரவில் பயணம் செய்வார்கள். இந்தச் சாதாரண விஷயங்கள் கூட இரயில்வே இலாகாவுக்கு ஏனோ தெரியவில்லை!

பேரளம் -- காரைக்கால் பகுதியில் உள்ள தனியார் பஸ் சொந்தக்காரர்களின் செல்வாக்கினுலுள்ள அங்கு அதிகம் இரயில் விடவில்லை எனமும், ஒடுகின்ற இரவிலும் அகாலத்தில் செல்வதாகவும் பேசப்படுகிறது.

இப்பகுதியில் தனியார் பஸ்களுக்குக் கொள்ளை இலாபம் வரும்போது இரயில்வேயிக்கு ஏன் இலாபம் வராது?—இது பற்றியெலலாம் ஆராய வேண்டும்."

காங்கிரசு ஏட்டின் கயிறு திரிப்பு

கழகச் செயலாளர் மறுப்பு

சின்னம்பேடு தி. மு. கு, செயலாளர் இராமலிங்கம் எழுதுவதாவது:—

பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த சின்னம்பேடு கிலக்கிழார்கள் இருவர், அவர்களது முப்பது மூட்டை நெல்லை ஆரணியைச் சேர்ந்த ஒரு வியாபாரிக்கு மூட்டை ரு. 70 வீலையில் விற்றனர்; அம மூட்டைகள் இரவு 11-மணிக்கு அவ்வியாபாரியால் நான்கு மாட்டு வண்டிகளில் கடத்தப்பட்டன.

அந்நெல்லை அரிசியாக்கி எங் களுரிலேயே விற்கும கோரிக்கை புடன் கட்சி வேறறுமையின்றி சில ஏழை காங்கிரசுக்காரர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் அக் கடத்தலை தடுத்து நிறுத்தி, பொன் னேரி தனி உணவு தாசில்தாருக்கு அறிவித்து அதை அவரிடம் ஒப் படைத்தனர்.

தாசில்தார் அவர்கள் R. C. No. 11825/68 F 2 Dt. 11-11-68 என னும் உத்தரவில், அம்மூட்டைகளை அங்கேயுள்ள அரசாங்கக் கொள் முதல் ஏஜெண்டிடம் சேர்ப்பித்து, அதை அறைத்து அவ்வூர் மக களுக்கே கட்டுப்பாடான விலையில் வழங்கிட ஏற்பாடு செய்தார்; இதுதான் உண்மையில் நிகழ்ந் தது.

பொய்ச் செய்திகளே நாளும் சுமந்துவரும் காங்கிரசு ஏடான 'சுவசக்தி' இதழ், இன்னுன்ன மையத் தீர்மதத்தக் கமுத்தவர் வன் ளரிவில் வழிப்பறி செயததாக எழுதி உண்மையை மறைத்துள் ளது.

பாராட்டத்தக்க பரிசுச் சீட்டுத் திட்டம்

தஞ்சை மாவட்ட வணிகக் கழகம் பாராட்டு

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவிக்கும்வகையில் தஞ்சை மாவட்ட வணிகக் கழக (சேம்பர் ஆப் காமர்ஸ்) செயலாளர் திரு. பி. கே டி. சண்முகம் தெரிவித்திருப்ப தாவது :—

"பொதுமக்கள்மீது வரி சுமை யைச் சுமத்தாமல் இலவுவான முறையிலும், பெருமளவிலும் வருவாயை உத்தேசிக்கும் முறையிலும், தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம் புரட்சிகர மானதாகும்.

தமிழகத்திற்கும், தமிழக மக் களுக்கும் பயனளிக்கும் திட்ட மாக இத்திட்டம் அமைந்திருப் பது பாராட்டக்கூடியதும் வர வேற்கத்தக்கதுமாகும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்தி வரும் தமிழக அரசினரை எவ வளவு பாராட்டினுலும் தகும்.

பரிசுச் சீட்டு விற்பனையின் வேகத் தைக் கவனித்தோமே, அத்திட் டத்திற்குப் பொதுமக்களின் பேராதரவு எங்ஙனமிற்கு இருக் கிறது என்பது புலனுகும்.

பரிசுச் சீட்டுத் திட்டம் பொதுமக் களுக்கு ஒரு கல்வாய்ப்பாகும். அரசுக்கு வருவாயைக் குவித்து தரும் நல்ல சாதனமுமாகும். இத்திட்டத்தின்மூலம் கிடைக் கக்கூடிய வருவாய் அனைத்தும வளர்ச்சித் திட்டங்களுக்கே பயன்படுத்தப்படும என அர சினர் அறிவித்திருப்பது வர வேற்கக்கூடியதாகும்.

இத்திட்டத்தில் முழு பொதுமக்கள் -- குறிப்பாக வணிகர் சமுதாயத் தினர் பேராதரவு கொடுப்ப தோடு முழு ஒத்துழைப்பும் கொடுக்க முன்வருவர் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள் கிறேம்."

நாட்டறம்பள்ளி ஒன்றியத்தில் குடும்ப நலத் திட்டம்

நாட்டறம்பள்ளி ஊராட்சி ஒன்றி யத்தில் கடந்த அக்டோபர் மாதத் தில் மட்டும் 64 ஆண்டுகளுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. தாய்மார்களில் 25 பேருக்கு கருத்தடை வசியம் (ஊப்) பொருத்தப்பட்டது.

திராமங்களில் கட்டம் போட்டு ஆணியர் ஆர். சஞ்ர்தனம், கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் திட டத்தின நனமைகளே விளக்கிப் பேசி வருகின்றனர்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

"காங்கிரசு நாளேடுகளான 'சுவசக்தி', 'ஜெயபேரிகை' ஆகிய வற்றில், திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை நிர்வாகக் குழுத் தலைவர் அனபில் தர்மலிங கம் அவர்கள் தொழிலாளர் களுக்கு விரோதமாக நடந்து கொள்வதாகும், கருர் வட்ட தி.மு.க. தணைச்செயலாளர் ஆலில் சென்னு தொழிலாளர்கள் தி.மு.க. தொழிநசங்கதில் சேரு மாறு பயமுறுத்தி வருவதாகவும், இப்போக்கினக் கண்டித்தது தி. மு. கழகத் தொழிற்சங்கப் பிரமுகரான மதுரைவீரன் தி. மு. க. விலிருந்து விலகிக காங்கிரசில் சேர்ந்துவிட்டதாகவும் வெளியான செய்தி என் வளத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

"அந்தச் செய்தி முற்றிலும் பொய்யானதாகும். மேற்சொனன நபர், தி. மு. க. தொழிற்சங்கத் தில் உறுப்பினர்கூட அல்ல என் பதோடு, மேற்படி நபருக்கும -- தி. மு. க. தொழிற்சங்கத்துக்கும் தொடர்பு சிறிதும் இல்லை என்பதையும், 'திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கக் கருர் கிளையின் செயலாளர்' என்ற முறையிலும், 'கருர் வட்ட தி.மு.க துணைச்செயலாளர்' என்ற முறையிலும் தெரிவித்துக்கொள் கிறேன" என்று தோழர் பரமத்தி சண்முகம் தெரிவிக்கிறார்.

அரசை நிர்ப்பந்திக்கக் காங்கிரசுக்காரர்கள் ஆர்ப்பாட்டம்!

இயற்கையின் விளைவால் ஏற்பட்டுள்ள சீர்குலைவையும் துச்சமாக மதிக்கின்றனர்

ஒரிசா முதலமைச்சரின் மனக்குமுறல்

புவனேசுவரம், நவ. 29—

"அண்மையில் கடவிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொட ரின் முதல் நாள் காங்கிரசார் நடத்தவிருக்கும் ஆர்ப்பாட் டத்தைத் தடுத்து நிறுத்த முயற்சிக்குமாறு நாட்டுப் பற் றுடையவர்களே வேண்டிக் கொள்கிறேன்"

என்று ஒரிசா முதலமைச்சர் சிங் தேவ் காங்கிரசுக் கட்சியினருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத் திருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்ப தாவது :—

"அரசை நிர்ப்பக்கிக்கும் பொருட்டு அதிருப்தியை வள ரச் செய்வதற்கே, ஆர்ப் பாட்டங்களே நடத்துவ தந்கே, கிசசமமாக இது உரிய நேரமல்ல; ஏனெனில், ஏற்கவவே ஒழுங்கற்ற நிலே யில் இருந்த மாகிலத்தின் பொருளாதார நிலேமை அண் மையில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தின் விளவாக மேலும் சீர்குலேந்துவிட்டிருக்கிறது.

ஏகய மாகிலங்களுடன் ஒரிசா வும், பொருளாதார -- பண நெருக்கடிகளே அனுபவித்து வந்திருப்பினும்கூட -- செல வினங்கள் கூடியும், வருவாய் வாய்ப்புக்கள் குறைவாக இருந்தும்கூட -- நிவாரண வேலேகளுக்குத் தாராளமாகப் பணம் ஒதுக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலேயைக் கருத்தில் கொண்டு, காங்கிரசார் நடத் தும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆத ரவு தர வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

காங்கிரசாரின் வன்செயல்கள்

கம்யூனிஸ்டுக் கட்சி

கண்டனம்

சென்னை, நவ. 26—

"அரசியல் பிரச்சினைகளே அடி தடி மூலமேதான் தீர்த்துக் கொள்வது என்று காந்தி நூற் றாண்டு விழாவில் காங்கிரசார் சபதமேற்றிருப்பதாகத் தெரி கிறது.

"தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி யின் தலேவர் திரு. சி. சுப்பிர மணியம் அவர்கள், சட்டம் -- ஒழுங்கு -- அமைதி பற்றி அடிக் கடி உபதேசிக்கிறார்; ஆனல் அவரது கட்சியினரே கட்டுக் கடங்காமல் வெறிச் செயல் களில் ஈடுபட்டு வருகின்றனர்"

என்று இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சென்னே மாவட்டக் குழுச் செயலாளர் டி. பழனிச்சாமி தெரி வித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை யில் மேலும் கூறுவதாவது :—

'சென்னே மாகநராட்சித் தேர் தல் முடிந்து நாட்கள் பலவாகி யும் கூட, அரசியல் பகை விரோ தச் சண்டைகள் நின்றபாடாக இல்லே.

சில இடங்களில் தெனுங்கர் -- தமிழர் என்ற விரோத உணர் வையும் சிலர் வேண்டுமென்றே தூபமிட்டுத்: தூண்டிவிட்டு வரு கின்றனர்.

தேர்தல் முடிவை ஏற்று சென்னே மாகநரததில் பல இடங்களில் காங்கிரசுக்காரர்கள் தாக்கப் படுவதாகக் காங்கிரசார் பிரச் சாரம் செய்தனர்; ஆனல் நடைமுறை உண்மைகள் வேறு விதமாக உள்ளன.

சென்னே 14-வது வட்டத்தில் தோற்றுப்போன காங்கிரசு வேட்பாளரின் ஆதரவாளர்கள், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி யைச் சேர்ந்த முன்னுள் கவுன் சிலர் வி. முனுசாமி வீட்டைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

இதேபோல், அமைந்தகரை தாண்டவராய சத்திரத்தில் தோழர் டி. ஏ. இராமகிருஷ் ணன் வீட்டுக்குள் நுழைந்து காங்கிரசார் தடி கொண்டு தாக்கியுள்ளனர்.

இந்த வன்செயல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன."

ஏமாற்றம் மிகுந்த இடைக்கால அறிக்கை!

நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை பற்றிக் கருத்தறிவித்த அவர், 'அறிக்கை, மிகுந்த ஏமாற் றத்தைத் அளிக்கிறது' என்று குறிப் பிட்டார்.

"மத்திய அரசு, மாலிங்கம்கு நியாயிளிக்க வழக்கமாகக் கடை பிடித்துவரும் நடபமுறையை மாற்றி, நிவாரண வேலேக்காகச் செலவிடப்படும் முழுத் தொகை யையும் மானியமாகவே தர வேண் டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஓரிசா மாலில காங்கிரசுக் கட் சித் தலேவர் லீமைணி ரௌத் ராய், 'ஓரிசாவைக் காப்பாற்ற' போராட் டம் துவக்குமாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறர்.

சா. கணேசன்

சென்னை, நவ. 28—

சென்னை மாகராட்சி மன்ற தி.மு.க. உறுப்பினர் திரு. சா. கணேசன் இன்று காலே விமான மூலம் டில்லிக்குப் பயணமாஞர்.

புதுடில்லியில் நவ. 29, 30 ஆகிய நாட்களில் இந்தியப் பொது நிர் வாக அமைப்புக் கழகத்தின் சார் பில் நகராட்சி மன்ற நிர்வாக முறை குறித்து கடைபெறவிருக் கும் கருத்தரங்கில், சென்னே மாகர ராட்சி சார்பில் தேரழச் சா. கணே சன் கலந்துகொள்கிறார். அவ ருடன் மாகராட்சிக் காங்கிரசு உறுப்பினர திரு. எஸ். ஜி. வியகு மூர்த்தியும் சென்றுள்ளார்.

புதுக்கோட்டை 22-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

புதுக்கோட்டை -- திருவள்ளுவர் நகர் எம். ஜி. ஆர். மன்ற உறுப் பினர் கூட்டம் 17—11—68-ல் திரு. ஆர். பிரகலாதன் அவர்கள் தலே மையில் நடைபெற்றது; அது போது, மன்ற நிர்வாகிகள் தேர் தல், திரு. மு. கு. புதுமை ஒளி ஆணுயாளராக இருந்து நடத்தி வைத்தார். தேர்ந்தெடுக்கப்பட் டோர் :—

தலேவர் : சீ. ஷேக் மொய்தீன்; அமைத் தலேவர் : ஆர். சங்கரன்; செயலாளர் : சி. அழைக்கன்; பொருளாளர் : சி. ஸ்ரீதர்; தனிக் கையாளர் : ஏ. ஏ. ரகீம்; மன்ற கண்காணி ப்பாளர்கள் : என். நவாப்ஜான், எஸ். இராமன்; செயற் குழு உறுப்பினர்கள் : அய்யார் கண்ணு, பி. சுங்தரம், எ. முகமது காசிம், கே. காகுபர்சிசை, சி. மாயாண்டி, வி. பெரியப்பர, மு. இ. புதுமைஒளி, எம். அப்துல்ரகீம், ஏ. சண்முகம்.

கலேக் குழு முகவரி

கே. ஏ. சாமி கலேக் குழுவினர் தாசன—மாலர அரிக்கும 'மது அரசின் சாதனே' என்ற நிகழ்ச் சியை நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க :—

கே. ஏ. சாமி கலேக் குழு 398-பி, இரயில்வே காலனி கிரசப்பட்டி, திருச்சி.

திண்டாமையை ஒழிக்க வேண்டுமானால் ....

'குற்றங்களுக்கான தண்டனையைக் கடுமையாக ஆக்க வேண்டும்'

'அவசியமானால் அரசியல் சட்டமும் திருத்தப்பட வேண்டும்'

தாழ்த்தப்பட்டோர் அனுபவிக்கும் தொல்லைகள்பற்றி தீண்டாமை ஒழிப்புக் குழுத் தலைவர்

லக்னோ, நவ. 29—

"தீண்டாமையை ஒழிக்க வேண்டுமானால், தீண்டாமைக் குற்றங்களுக்கான தண்டனையைக் கடுமையாக ஆக்க வேண்டும்; இதற்காகச் சட்டம் திருத்தப்பட வேண்டும்; தாழ்த்தப்பட்டவர்களை அவமதிக்கும் குற்றத்தைச் செய்பவர்களுக்குக் குறைந்த அளவுக்கே னும் ரூ. 50 அபராதமும் — மூன்று மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கவேண்டும்.

"கடந்த 12 ஆண்டுக் காலத்தில் தீண்டாமையைப் பொறுத்தவரையில் 240 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; அவைகளில் 43 வழக்குகளில்தான் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றன"

என்று தீண்டாமை ஒழிப்புக் குழுவின் தலைவர் இனாயபெருமாள் கூறியிருக்கிறார். அவர் மேலும் சுட்டிக்காட்டியிருப்பதாவது :—

"தமிழ்நாட்டின் சிலபகுதிகளில், தாழ்த்தப்பட்டோர், சைக்கிளில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

மைசூர் மாநிலத்தில் செருப்புப் போட்டுக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

உத்தரப் பிரதேசத்தில், 50-க்கு மேற்பட்ட நிராயுதங்களில் தெருக் குமாஸ்தாகளிலிருந்து தண்ணீரைப் பிடித்துச் செல்லத் தாழ்த்தப்பட்ட குடிமக்கள் அனுமதிக்கப்படாதது வருந்தத்தக்கது.

காரி, கான்பூர் நகரங்களில் கலிலூரி விடுதிகளிலிடம் மற்ற வர்களுடன் சேர்ந்து சாப்பிட அனுமதிக்கப்படுவதில்லை.

போலீஸ் பயிற்சிக் கல்லூரி யிலும் இதேபோன்ற நிலைமை நிலவுகிறது.

இராணுவத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய

இடம் அளிக்கப்படாதது வேதனைக்குரிய ஒன்றாகும்.

தீண்டாமை ஒழிப்புக் குழுவின் இடைக்கால அறிக்கையை நான் ஏற்கனவே மத்திய அரசிடம் அளித்துவிட்டேன்; குழுவின் இறுதி அறிக்கையை சனவரித் திங்கள் மூன்றாவது கிழமையில் தாக்கல் செய்வேன்."

அணுகுண்டு தயாரிப்பில் சென்சீன

இந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறு நேரிடுமா?

புதுடில்லி, நவ. 29—

"அணு ஆயுதங்களைச் செஞ்சீனா தயாரிப்பதால், இந்தியாவின் பாதுகாப்பு எவ்வாறு பாதிக்கப் படுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு, அதுபற்றி இடைவிடாமல் மதிப்பிட்டுவருகிறோம்"

என்று மக்களவையில், கேள்வி நேரத்தின்போது, பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் கூறினார். அவர் மேலும் அதுபற்றிக் கூறியதாவது :—

"20 கிலோ டன் வீரியத்துடன் கூடிய 40 அணுகுண்டுகளை ஆண்டுதோறும் செஞ்சீனாவால் தயாரிக்க இயலும்."

நவரை விளைச்சலில் நல்ல நம்பிக்கை

பெய்துள்ள மழையினால் செங்கற்பட்டு மாவட்டத்தில் உணவு உற்பத்தி பெருகும்

சென்னை, நவ. 28—

நேற்று பெய்த மழை, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதற்கும் பயனுள்ளதாகும் என்று பல பகுதிகளிலிருந்தும் கிடைத்து வரும் புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவருகிறது.

"இந்த மழை, நவரை உற்பத்தியில் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கிறது" என விவசாயத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"இப்பொழுது நடப்பட்டிருக்கும் கிச்சிலி போன்ற சம்பாத் தானியங்களுக்கும் இது மிகவும் உதவிகரமாக இருக்கக்கூடும்" என்றும் அவர் கூறினர்.

"தானிய விளைவு விகிதம் சராசரியைவிட அதிகமாக இருக்கக்கூடுமாதலால், உணவு உற்பத்தி அப்படியொன்றும் மோசமாக இருக்காது" என்றும் அவர் கூறினர்.

"செங்கற்பட்டு மாவட்ட ஏரிகள் தொடர்ந்து தண்ணீரைப் பெற்றுவருவதால், உயர் ரக நெல் '1 ஆர்.-8'-ஐ டிசம்பர் கடைசி வாரத்தில் நம்பிக்கையுடன் விதைக்கலாம்" என்றும் அவர் கூறினர்.

நிராகரிட முன்னேற்றக் கழகத்திற்காக நிருபர் ரோ. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆரியரசகமும், கொலிபிடு பலரகமும், அன்பெவராகமும் கொண்டு அழகிய அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-18) அச்சிடு வெளியிடுமிறது.

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

கற்றுப்பயணம்

டிச. 1 காலை 11-மணி : மதுரை—மாவட்ட ஆட்சித் தலைவர்—உணவு வழங்கு துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுரை; மாலை : கமிழ்நாடு பெயர் மாற்று விழா நிகழ்ச்சியில் பங்கேற்பு;

டிச. 2 காலை 9-30-மணி : கணியூர்—தாழ்த்தப் பட்டோருக்கு 'பட்டா' வழங்குதல்; மாலை : குளூர்—மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆய்வுரை; தாழ்த்தப் பட்டோருக்கு 'பட்டா' வழங்குதல்.

டிச. 3 காலை 9-30 மணி : திட்டம் பாரையம் — தண்ணீர்த்தொட்டி திறப்பு விழா; காலை 10-30 மணி : கோவில்பாளையம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; முகாசிபிடாரியூர் ஊராட்சி மன்ற வரவேற்பு; மாலை 6-மணி : சிவகிரி—பொதுக்கூட்டம்; 4-30 மணி : சோழங்க பாளையம்—பொதுக்கூட்டம்; இரவு 7-30 மணி : பெருங்துறை —பொதுக்கூட்டம்; 8-30 மணி: ஈரோடு—பொதுக்கூட்டம்.

செய்தித் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

டிச. 2 காலை 9-30 மணி: கணியூர் — தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புத் திறப்பு விழாவும், நிலம் வழங்குதலும்; மாலை 8-30 மணி : குளூர்—தாழ்த்தப்பட்டோருக்கு 'பட்டா' வழங்குதல்.

வழக்கறிஞர்

என்.வி.என். சோமு

எம்.பி. நிகழ்ச்சிகள்

டிச. 1 மாலை 4-மணி : சிதம்பரம் —அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் சார்பில் நடைபெறும் 'தமிழ்நாடு'—வெளிநி விழா நிகழ்ச்சியில் பங்கேற்பு; இரவு 7 மணி : மாயூரம்—பொதுக் கூட்டம்.

கோவை வட்டத்தில்

எஸ். எஸ். இராசேந்திரன் கலை நிகழ்ச்சிகள்

கோவை வட்ட தி. மு. க. சார்பில் 30—11—68 மாலை 4-மணிக்கு ஜோதிபுரம் — பெரியநாயக்கன் பாளையம் சத்தியா டூரிங் டாக்கீசிலும்; இரவு 8 மணிக்கு தொண்டாமுத்தூர் முருகன் ஜரான மில்லிலும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் வில்லுப் பாட்டு கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கோவை நகர தி. மு. க. சார்பில் 1—12—68 காலை 9 மணிக்கு ராயல் தியேட்டரில், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'அண்ணாவின் ஆட்சி' எனும் வில்லுப்பாட்டுக் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தஞ்சை மாவட்ட தி. மு. க. கூட்டம்

"1—12—68 பிற்பகல் 2 மணியளவில் மன்னர்குடி—எனது இல்லத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும்; வட்டச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் மன்னை. நாராயணசாமி அறிவிக்கிறார்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

"செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 1—12—68 காலை 9 மணியளவில், மதுராந்தகம் மஹால் பாக்யம் பவனிலேயே விடுதியில் நடைபெறும்; கழக வளர்ச்சி, மாவட்டக் கழக நிதி, நகராட்சித் தேர்தல் ஆகியவைகள் குறித்துப் பரிசீலிக்கப்படும்"

என்று மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

கடலூர் வட்ட தி. மு. க. குழுக் கூட்டம்

"1—12—68 காலை 9 மணிவளவில், கடலூர் வட்ட தி. மு. க. குழுக் கூட்டம், செல்லங்குப்பம் பாண்டுரங்கன் அவர்களின் இல்லமான 'அன்பகத்தில்', வட்ட அவைத் தலைவர் மாணிக்கவேலு தலைமையில் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட விருப்பதால், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று வட்ட செயலாளர் ஏ. வி. தண்டபாணி அறிவிக்கிறார்.

திருப்பத்தூர் வட்ட தி.மு.க. குழுக்கூட்டம்

"திருப்பத்தூர் வட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 1—12—68 பிற்பகல் 2-மணிக்கு அவைத் தலைவர் மாரப்பன தலைமையில்—'எழவேல்' பவனிள் தங்கும் விடுதியில் நடைபெறும்; வட்டப் பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று வட்டச் செயலாளர் சி.எம்.எஸ். பாலு அறிவிக்கிறார்.

இனிப்பு வழங்கும் விழா

சென்னை 10-வது வட்டம் (வண்ணை) கருணாநிதி மன்றச் சார்பில், 1—12—68 மாலை மண்ணடி முதலித்தெரு 5-வது சந்திதுள்ள மன்ற அலுவலகத்தில், வட்ட மாணவரணிச் உறுப்பினர் டி. வேங்கடேசன் முன்னிலையில், 'தமிழ் நாடு'—வெற்றி விழாவினையொட்டி இனிப்பு வழங்கப்படும்.

நடக்க இருப்பவை

30—11—68

மேட்டுப்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ஊராட்சிமன்றத்திற்கு அருகில்; தலைவர் : ஆர். கல்யாணசுந்தரம்; பேசுவோர் : ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., நன்னிலம் அ. நடராசன், கு. சண்முகம், மு. க. அமீர், த. சோமசுந்தரம், நாடி. இரத்தினவேல். (மாலை 5-மணிக்கு ஊர்வலம் நடைபெறும்).

சென்னை-34-ல் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 219/68

மடாதிபதி
ஸ்ரீ காஞ்சி வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் மடம்,
சின்ன காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் வட்டம்,
திண்டிவனம் மாவட்டம் —மனுதாரர்

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டம் சின்ன காஞ்சிபுரம் ஸ்ரீ காஞ்சி வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் மடம் விஷயமாக :—

மேற்படி மடத்திற்குச் சொந்தமான தும் காஞ்சிபுரம் வட்டம் தேனம்பாக்கம் கிராமத்தில் சர்வே எண் 44-ல் அடங்கிய ஏக்கர் 8.77 சென்ட் அளவு புன்செய் நிலத்திலும், சின்ன காஞ்சிபுரம், கெம்பர் பி, பட்டாளத் தெரு திருநாளர் கே. வேதாத்திரி முதலியார் என்பவருக்கு 1—1—1969 முதல் 50 வருடங்களுக்கு வருட வாடகை ரூ. 500 (ருபாய் ஐநூறு) குத்தகை யாகப் பெற்றுக்கொண்டு நீண்ட காலக் குத்தகைக்கு ஆளிக்க அனுமதி வேண்டி 1958-ம் வருடம் இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின் கீழ் செய்து கொண்ட மனு.

மனு எண் 219/68/டி1/
தேதி 25—11—68

1. மேற்படி நீண்டகால குத்தகை மனு குறித்து சென்னையிலுள்ள தமது அலுவலகத்தில் இந்து சமய அறநிலைய ஆணையர் அவர்களால் 30—12—68 அன்று பிற்பகல் 2 மணிக்கு விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனுகுறித்து கருத்துரைகளும் மறுப்புரைகளும் எவையேனும் இருப்பின் அவைகளை எழுதுமூலமாக 28—12—68 அன்றோ அல்லது அதற்குமுன் இவ்வலுவலகத்துக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை கேரிலும் மேற்குறிப்பிட்ட இடத்திலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

திட்டக்குடியில்

பெரியார் பிறந்த தின விழா

1—12—68 மாலை 6 மணியளவில், திட்டக்குடியில் பெரியார் 90-வது ஆண்டு பிறந்த தின விழாப் பொதுக் கூட்டம் பெரியார் திடலில் நடைபெறும்; தலைவர் : வை. பி. பழனியாண்டி; வரவேற்புரை வழங்குவோர் : சு கிருட்டிணசாமி, எம். செல்வராசு, டி. இராசவேலு, ச. இராமலிங்கம், டி. ஆர். குப்புசாமி, பெ. நாராயணன், டி. ஆர். கிருட்டிணசாமி, எஸ். திராவிடமணி.

பெரியார் அவர்கள், நன்றி தெரிவித்துப் பேசுவார்கள்.

மாலை 4-மணிக்கு மு. இராசு தலைமையில்,-- அலங்காரிக்கப்பட்ட தேரில் பெரியார் அவர்கள் ஊர் வலமாக அழைத்துச் செல்லப்படுவார்; ஊர்வலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விளையாட்டு வீரர்களுக்கு 'நகர் உபசரிப்பு'

30—11—68 மாலை 5-30 மணிக்கு இரஷ்டி (டைனமோ மினல்)—இந்தியக் கால்பந்தாட்டக் குழுக்களுக்கு சென்னை மாநகராட்சி சாமியே சேரு விளையாட்டரங்கில் நகர் உபசரிப்பு' அளிக்கப்படும்.

டிசம்பர் முதல் நாள்

மகிழ்ச்சி விழாக் கூட்டங்கள்

கரூர்	...	அமைச்சர் மா. முத்துசாமி கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ.பி.எல். சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ. எம். கந்தசாமி எம்.எல்.ஏ.
திருநெல்வேலி	...	ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம் எல்.ஏ., இரத்தினவேல் பாண்டியன் பி.ஏ.பி.எல்., ஏ. எஸ். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
பட்டுக்கோட்டை	...	இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ. எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
குடியேற்றம்	...	காஞ்சி மணிமொழியார் ஜி. ஈடாரான் எம்.எல்.ஏ.
திருவள்ளூர்	...	டி.வி. நாராயணசாமி எம்.எல்.ஏ. கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. எஸ். கே. சம்பந்தம் எம்.பி. எஸ். எம். துரைராஜ் எம்.எல்.ஏ.
கோவில்பட்டி	...	எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ. காட்டூர் கோபால் இரத்தினசபாபதி எம்.எல்.ஏ.
ஆம்பூர்	...	டி.ஜே.பொன்னுவேலுஎம்.எல்.ஏ. சைதை சம்பந்தம்

ஆந்திர மாநில தி. மு. க. தேர்தல்

15—12—68-ல் நடைபெறும்

ஆந்திர மாநில தி.மு.க. அமைப்புக்கான தேர்தல் 15—12—68 ஞாயிறு காலை 10 மணிக்கு புத்தூர் வைசியச் சத்திரத்தில் நடைபெறும்.

—தலைமைக் (கழகம் தி.மு.க.)